மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 14/2025**

**வா.சா. 1 கண்ணன், த-பெ. தங்கவேல்**

நாள்: 22.07.2026

**( பி.ப 02.56 முதல் 03.22 அபி.ப வரை)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**1)** எனக்கு எழுதப் படிக்க தெரியும் என்று சொன்னால் தெரியாது. எத்தனை வருடங்களாக நானும் என்னுடைய பெற்றோர்களும் மறவர் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால் சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக குடியிருந்து வருகிறோம். அதுபோலவே 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அதே தெருவில் சுமார் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் இருக்கலாம். திருமணத்திற்கு பின்னர் நானும் என்னுடன் பிறந்தவர்களும் மேற்படி மறவர் தெற்கு தெருவில் உள்ள வீட்டில் தான் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். திருமணத்துக்கு பின்னர் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம் என்று சொல்லுவது தவறு என்றும் திருமணத்திற்கு பின்னர் அவரவர் வீட்டில் தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

2) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் 2 வது பிரதிவாதிக்கு கடந்த 18.01.2025 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும்

அனுப்பவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பாத காரணத்தினால் என்னுடைய அறிவிப்பின் பெயரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய வழக்கறிஞர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் நான் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்குக்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) வழக்கு சொத்து தற்பொழுதும் காலிமனையாகத்தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை சுற்றிலும் கட்டப்பட்டதாக சொல்லக் கூடிய சுற்றுச்சுவரின் உயரம் சுமார் 12 அடி இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. 7 அடி உயரம் தான் இருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள அமைப்பு வழக்கு சொத்தின் அமைப்பு என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு சொத்துக்கு சுற்றிலும் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரின் உயரம் 4 அடி என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்று சொன்னால் 7 அடி உயரத்தில் கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. வழக்குரையில் வழக்கு சொத்து விபரத்தில் சுவற்றின் உயரம் 4 அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான்.

4) வழக்கு சொத்தின் விவரங்கள் வழக்குரையில் முழுமையாகவும் சரியாகவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது பொதுச்சுவர் சம்பந்தமாக என்னுடைய தாயாரும் 2வது பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்று சொன்னால் எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் சாட்சிகள் விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கவேல், த.பெ.சுப்பையா என்று குறிப்பிடப்பட்டிருப்பவர் என்னுடைய

தகப்பனார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அதில் உள்ள கையெழுத்து அவருடையதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எங்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) வழக்கு தாக்கல் செய்யப்படும் பொழுது பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சாட்சி விசாரணைக்கு வழக்கு வாய்தா ஏற்பட்டிருக்கும் பொழுது பின்னிட்டு பெறப்பட்டு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் பெறப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணமானது 29.03.2025 அன்று பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னுடைய அம்மா வழக்கு சொத்தினை முத்துரத்தினம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய நாளிலிருந்து, வா.சா.ஆ.7 ஆவணம் பெறப்படும் வரை என்னுடைய அம்மா பெயரின் எவ்வித வருவாய்துறை ஆவணங்களும் மாற்றம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

6) வழக்குரையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கடந்த 09.02.2025 தேதியிலிருந்து வாதிகள் மற்றும் 3வது பிரதிவாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யப் போவதாக பிரஸ்தாபித்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் எங்களுடைய அனுபவத்தை என்ன வகையில் இடைஞ்சல் செய்தார்கள் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மாடுகளை கட்டுவதும் எங்களுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்தும் வருகிறார்கள். கடந்த 09.02.2025 அன்று 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எங்களுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்தது தொடர்பாக அதை நிரூபிக்கும் வகையில் புகைப்படமோ அல்லது காவல் நிலையத்தில் புகார்

மனு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை.

7) 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருக்கும் வழக்குச் சொத்தினை மீட்டு எடுப்பதற்காக நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாயார் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தினை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால் என்னுடைய தாயார் எந்த கிரைய ஒப்பந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை. என்னுடைய தாயார் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக வழக்குச் சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம்.

8) வழக்கு சொத்துக்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய அதனால் காழ்ப்புணர்ச்சி கொண்டு பொய்யாக உண்மைக்கு மாறான சங்கதிகளால் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இல்லை என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகின்ற காரணத்தினால் நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் மீது வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 30.09.1994 தேதியிட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்வதற்காக என்னுடைய தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே அவர் எந்த நடவடிக்கையும்

எடுக்கவில்லை என்று சொன்னால் எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு